மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
அசல் வழக்கு எண். 727/2021

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ம் நாள் வியாழக்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–3 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : த.நெடுஞ்செழியன் | தொழில் | : சார்பதிவாளர், வேப்பூர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : தங்கமணி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 54/2022 |

**வாதி தரப்பு முதல் விசாரணை**

1) நான் தாவா வழக்கில் வாதி தரப்பு 3 வது சாட்சியாவேன். நான் தற்போது வேப்பூர் சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களை நான் தற்போது எடுத்து வந்துள்ளேன்.
2) 11/11/2020 ஆம் தேதியிட்ட ஆவண எண்.1699/2020 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் குன்னம் வட்டாட்சியர் எனக்கு ஒரு செயல்முறை ஆணை உத்தரவிட்டுள்ளார். மேற்படி செயல்முறை உத்தரவில் பெறுநர் என்ற இடத்தில் எனது பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செயல்முறை உத்தரவில் தனிப்பட்ட நபரின் பெயரோ, முகவரியோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் எனக்கு அனுப்பப்பட்ட செயல்முறை உத்தரவின் உண்மை நகல் (சார்பதிவாளரால் தாக்கல் செய்யப்பட்ட செயல்முறை உத்தரவு **Ex.W.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
3) 11/11/2020 ஆம் தேதி தான் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், பத்திரங்களும் அன்றைய தேதியில் தான் வாங்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். அன்றைய தினமே பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். செயல்முறை உத்தரவு தேதியானது 28/10/2020 ஆகும். 28/10/2020 ஆம் தேதிய கடிதத்தில் மனுதாரர் என்னிடம் மனு கொடுத்ததாகவோ, அந்த மனு தொடர்பாக மேற்படி உத்தரவில் பார்வையில் மனுதாரர் கொடுத்த மனு பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

DMunnKumar

4) அந்த செயல்முறை ஆணையில் கீழப்புலியூர் பகுதி குறுவட்ட அளவரின் அறிக்கை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மனுதாரரின் பெயரில் இருந்த தனிப்பட்ட அபிப்ராயத்தின் காரணமாக நானாக மனுவை வட்டாட்சியருக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.மேற்படி செயல்முறை உத்தரவு கடிதத்தில் பொருள் என்ற காலத்தில் ஆவண பதிவு – பெரம்பலூர் மாவட்டம் – குன்னம் வட்டம் – ஒதியம் கிராம புல எண்.446/5–ல் 1.16.50 ஏர்ஸ் ஆவண பதிவு மேற்கொள்ளுதல் – அறிக்கை அனுப்புதல் – தொடர்பாக என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனவே மேற்படி பத்திரம் 11/11/2020 ஆம் தேதி தாக்கல் செய்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) மேற்படி கிரய பத்திரத்தில் முந்தைய ஆவண எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு ஆவணம் கிரயம் செய்யப்படும்போது, வில்லங்க சான்றிதழை பார்த்துவிட்டு தான் கிரயம் செய்வோம் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழை பார்வையிடும் போது இவ்வழக்கு சொத்தில் 1999–ல் ஒரு அடமான பத்திரம் இருந்ததை தெரிந்துக் கொண்டேன் என்றால் சரிதான்.

6) மேற்படி அடமான பத்திரம் தொடர்பாக தனிப்பட்ட நபரிடமோ, அல்லது பதிவு செய்த அலுவலகத்திடமோ மேற்படி ஆவணத்தை கேட்டு பெற்றேனா என்றால் அந்த பத்திரம் தொடர்பாக கேட்க வேண்டிய தேவையில்லை என்பதால் நான் கேட்கவில்லை. இந்த வழக்கு சொத்து எனது அதிகார வரம்பிற்குட்பட்ட குன்னம் வட்டம், ஒதியம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

7) குன்னம் வட்டத்திற்கு குன்னத்தை சுற்றியுள்ள கிராமங்களுக்கு குன்னத்திலேயே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி 1970 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு, தற்போது வரை செயல்பாட்டில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வில்லங்க சான்றிதழை ஆராய்ந்து பார்த்த போது, பெரம்பலூர் கூட்டுறவு நிலவள வங்கி, வாலிகண்டபுரத்தில் உள்ளது என்றும், தாவா சொத்திற்குரிய நபர் குன்னம், ஒதியம் கிராமம் மற்றும் செங்குணம் கிராமத்திற்கு உட்பட்ட சொத்துக்களை பெரம்பலூர் கூட்டுறவு நிலவள வங்கியில் அடமானம் வைத்துள்ளார் என்பதை தெரிந்துக் கொண்டேன்.

8) நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் 27 ஆண்டுகளாக பணிபுரிந்துள்ளேன். 6 ஆண்டுகளாக சார்பதிவாளராக பணியில் இருந்து வருகிறேன். அரசாங்கத்தால் போடப்படும் G.O–க்கள் எனக்கும் பொருந்தும் என்றால்

சரிதான். மேற்படி பெரம்பலூர் கூட்டுறவு நிலவள வங்கியில் அடமானமானது 1999 ஆம் ஆண்டு தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசாணை எண். MS.70 கூட்டுறவு மற்றும் நில வளத்துறை நாள் 13/05/2006 தமிழக முதல்வராக பதவி ஏற்ற திரு.கருணாநிதி அவர்கள்31/03/2006 வரையில் உள்ள நிலுவை கடன்கள் அனைத்தும் அரசு சார்பில் தொகை செலுத்தப்படும் என்றும், மேற்படி கடன்கள் ரத்து செய்யப்படும் என்றும், அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) தாவா சொத்தில் கடனானது 1999 ஆம் ஆண்டு வாங்கப்பட்டதாக சொல்லப்பட்ட நிலையில் மேற்படி கடன்கள் 31/03/2006 ஆம் தேதியிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்திற்குரிய 11/11/2020 ஆம் தேதியிட்ட விற்பனை ஆவணத்தை நான் தான் பதிவு செய்தேன். மேற்படி தாவா சொத்தின் பத்திரத்தில் துறைமங்கலத்தில் பூர்வீகமாக குடியிருந்து தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

10)446/5 மொய்தீன் சாயபு மகன் மீரா சாயபு ராவுத்தர், முத்துகாமாட்சி மகன் ராஜமாணிக்கம் பெயரில் பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக ஆவணங்களில் ஏற்கனவே தனிப்பட்ட நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி தாவா சொத்தை நான் தரிசு என்றும், விஸ்தீர்ணம் குறைவாக இருந்தது என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11)அடமான பத்திரத்தில் ராஜமாணிக்கம் தனக்காகவும், தனது மைனர் மகன்களுக்காகவும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 07/09/2020 (ஆவண எண். 2158/2020 மூலமாக) ஆம் தேதி ஆவண எண்.3041/1999 ரசீது ஆவண ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2006 ஆம் ஆண்டே தமிழக அரசின் அரசாணைப்படி மேற்படி கடன் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் 2020 ஆம் ஆண்டு ஆவண ரத்து பத்திரம் என்பதே 1ம் பிரதிவாதிக்கு சாதகம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வில்லங்க சான்றிதழில் அடமான பத்திரம் குறித்த பதிவு தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்ததால் அரசாணை மூலம் கடன் ரத்து செய்யப்பட்டிருந்தாலும் தனிப்பட்ட நபர்களிடம் பத்திரம் மூலம் ஆவணத்தை ரத்து செய்வது நடைமுறையாகும்.

12) 24/06/2019 ஆம் தேதி தான் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த கிரய முன்னவர்களின் பெயர் பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பு யாருடைய பெயரில் பட்டா இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வாதி தரப்பு சான்றாவணமான –1 ஆன பட்டாவில் ராமலிங்கம் மகன் குமரேசன் பட்டா எண். 2180, சர்வே எண்.446/5 ஒதியம் கிராமம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் விஸ்தீர்ணம் 1.16.50 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த பட்டா எப்போது கிரயம் கொடுத்தவர்களின் பெயரில் மாறியது என்ற விபரம் எனக்கு தெரியாது.

13) இவ்வழக்கில் மெய்தன்மை சான்று தரப்பினர்களின் பெயரில் எனக்குள்ள அக்கறையால் பெறப்பட்டப்பட்ட ஒன்று என்றாலும், அதன் அடிப்படையில் தான் பத்திர பதிவு நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல.

14) இந்த மெய்தன்மை சான்று இல்லை என்றால் இந்த பத்திரம் பதிவாகியிருக்காது என்று சொன்னால் சரிதான்.

15) எந்த ஒரு ஆவணத்திற்கும் நான் என்னுடைய தனிப்பட்ட ஆர்வத்தை காட்டவேண்டும் என்ற அவசியம் இல்லை என்றாலும், மெய்தன்மை கேட்டு கடிதம் அனுப்ப வேண்டிய வேலை என்னுடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

16) நான் கேட்டு பெற்றதால் மட்டும் தான் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68–ன்படி இந்த பத்திரமே செல்லாதது என்று சொன்னால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

*Sd/–*

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.

DMC Kunnam